உ.

கடவுள் துணை.

நடேசர்சிந்து.



சென்னை:

ஸ்ரீமாதவவிலாச அச்சியந்திரசாலையில்

பதிப்பிக்கப்பட்டது.

இதன்விலை] **1905.** [பை-௩.

கடவுள் துணை.

நடேசர் சிந்து.

***

சீரார்நடேசர் சிந்தென்றபாடல்
சீராகயானுரைக்க விநாயகா
சித்தம்வைத் தாளுமையா.

ஆனந்தநாதா ஆடியபாதா
மோனந்தமாகவந்தே நடேசா
முத்திதந்தாளுமையா (௧)

ஐயாபரமே ஆதிசிவமே
மெய்யாயுனைப் பணியும் நடேசா
மைந்தனைக்காருமையா (௨)

கங்கைதரித்தவா காலனையுதைத்தவா
மங்கைசிவகாமியுடன் நடேசா
மலர்ப்பதந்தந்தாளையா (௩)

சிவகாமிபாகா சின்மயதேகா
பவமதைநீக்கியெந்தன் நடேசா
எழுபொழுதாளுமையா (௪)

பஞ்சகிர்த்தியாகார பரமதயாபர
கெஞ்சுறபஞ்சைமீது நடேசா
கிருபைகூர்ந்தாளுமையா (௫)

சந்திரசடாதர சாம்பசிவஹர
சுந்தரகிருபாகர நடேசா
சுகப்பொருள்தந்தாளையா (௬)

சரியைகிரியையோகம் சார்ந்துஞானமாக
கரியைப்போர்த்ததேக நடேசா
கடையனைக்காருமையா (௭)

பதஞ்சலிவியாக்கிரர்க்கும் பாததெரிசனம்
நிதந்தந்துகார்த்ததுபோல் நடேசா
நேசமாய்த்தந்தாளையா (௮)

புரமூன்றெரித்தவனே புண்ணியமானவனே
சிரமலைதரித்தவனே நடேசா
சிறியேனையாளுமையா (௯)

மோனஞானமான மூலகாரணனே
ஆனந்தத்தாண்டவனே நடேசா
அடியேனைக்காருமையா (௰)

தில்லைச்சிதம்பரனே தொண்டர்துதிஅரனே
அல்லல்படுவோனை நடேசா
ஆதரித்தாளுமையா (௰௧)

அன்னை தந்தையில்லை யன்பானவேருமில்லை
சொன்னேனுனையேயல்லால் நடேசா
சுந்தர ஆதரில்லை (௰௨)

ஊரிருந்தென்ன உற்றாரிருந்தென்ன
ஆரிருந்துமென்ன நடேசா
அ ஐயா ம் தனையாளையா (௰௩)

நம்பினேனுன்னை நழுகவிடாதென்னை
அம்பிகைபாகாமுன்னை நடேசா
அன்பாயெனையாளையா (௰௪)

என்போலபாவி யுலகிலுலாவி
உன்னையே நிதங்கூவி நடேசா
உதகாதெனையாளையா (௰௫)

பத்திசெய்யாச்சிறியேனைப் பாரில்மேவானை
உத்தமரினமையிலை நடேசா
புதியரியாருமையா (௰௬)

எப்போதுமித்தேகம் இருந்தென்னயோகம்
ஒப்பிலாவுன்பதத்தை நடேசா
உதவையாய்த்தந்தாளையா (௰௭)

ஆரணனாரணற்கும் அனந்ததேவர்க்குங்
காரணமானவனே நடேசா
சுந்தரா யெனையாளையா (௰௮)

நித்தியானந்தமூர்த்தி நிமலா அருள்புத்தி
பத்தியாயுனைப்பணியும் நடேசா
பாலகனைக்காருமையா (௰௯)

இத்தனைநாளும் எளியேன்படுந்துயரம்
சித்தனேநீதீர்த்து நடேசா
சுகப்பெறப்பாருமையா (௨௰)

பலவினைதீர்க்கும் பத்தரைக்காக்கும்
நவபலமானோர்துதி நடேசா
பத்தனைக்காருமையா (௨௧)

பஞ்சாட்சரப்பொருளே பரமசுகப்பொருளே
அஞ்சாமல் தந்தருளே நடேசா
அன்பனைக்காத்தருளே (௨௨)

திருத்தில்லைராயா தேவர்சகாயா
வருத்தந்தனைத்தீர்த்து நடேசா
வடியனைக்காருமையா (௨௩)

தேவர்திதேவா திருமால்விண்டுமேலவா
மூவர்க்குமேலானவா நடேசா
மூடனெனையினிக்காருமையா (௨௪)

முத்திக்குகந்தவனே முசுகுந்தர்க்காதிதந்தவனே
[illegible] நடேசா
[illegible] (௨௫)

அஷ்டதிசைப்பதி ஆனந்தமானநிதி
இஷ்டமாய்நல்லகதி நடேசா
ஈந்தெனையாளுமையா (உ௬)

ஐம்புலத்தாலே அடியைக்காணுதாலே
இன்பங்களைத்தானடியை நடேசா
ஏழைக்குத்தந்தாளையா (உ௭)

ஐயம்புகழ்மெய்யா மான்மழுவேந்துங்கையா
ஒய்யாரமாகவந்தே நடேசா
உகந்தெனையாளுமையா (உ௮)

அஞ்செழுத்தோதி யருந்தவத்தோர்துதி
குஞ்சிதப்பாதந்தந்துன் நடேசா
குழந்தையைக்காருமையா (உ௯)

ஆலவிடங்கண்டு அமரர்க்காகவுண்டு
நீலகண்டமானவரே நடேசா
நேயனையாளுமையா (௩௰)

மாதர்வலையிற்பட்டு மயங்கினேனென்கட்டு
பாதகனாகாமலே நடேசா
பட்சம்வைத்தாளுமையா (௩௧)

அம்புருநாதனை அய்யருமுனிவோரை
சம்பிரமமாக்காத்ததுபோல் நடேசா
சதாநடனுனைமையா (௧௨)

மால்மத்தளங்கொட்ட மகேசன்தாளங்கொட்ட
கால்தூக்கி ஆடிநின்ற நடேசா
கழலிணைதந்தாளையா (௧௩)

பொன்னுலகவானோர் புகழ்மயிலாப்பூர்
தன்னிலேவளரற்புதனே கபாலீசா
தரிசிதவந்தாளையா (௧௪)

காஞ்சிபுரியானே காமனெரித்தோனே
அஞ்சியடியேனுக்குன் ஏகாம்பரா
அருள்தந்தாகாருமையா (௧௫)

திருவானைக்காவில் திருமால்தொழுஞ்சோலையில்
உருவாகியேவிளங்கும் சம்புலிங்கா
உலகிலெளியானாயா (௧௬)

அன்னமயமான அப்பார்லியானே
உன்னைமூப்பாகனே அருணேசா
உகந்திருப்பாருமையா (௧௭)

திங்களணிநாதா தூய்புகழ்மாதா
துங்கமயுத்தெண்கடளந்தி நாயகா
தவிப்பேனைக்காருமையா (ந-அ)

சிவமுனிவர்தொழும் செல்வசிவகாமிமகிழ்
கோலப்பதங்களையே நடேசா
குறைவிலர்தந்தாளையா (ந-க)

மந்திரமூலா மறையவர்நூலா
சுந்தரம்தொழும்சீலா நடேசா
சுந்தரர்க்கநுகூலா (சாய)

ஆடும்நடேசர் ஆனந்தசிந்தை
பாடிப்படிப்போர்க்கு நடேசா
பரகதிதந்தாளையா (சக)

நடேசர்சிந்து

முற்றிற்று.